දුරකථන ) 0112669192 , 0112675011
தொலைபேசி ) 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 , 0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax )0112692913

විද්‍යුත් තැපෑල )postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ් අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )
website )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

සෞඛ්‍ය අමාත්‍යාංශය
சுகாதார அமைச்சு
Ministry of Health

මගේ අංකය )
எனது இல )
My No. ) CF/EXG/13/2024

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி ) 2024/07/15
Date )


பொது சுற்றறிக்கை கடித இலக்கம் :- 02 - 107 /2024

மாகாண சுகாதார செயலாளர்கள்,
பிரதிப் பணிப்பாளர் நாயகம் - இலங்கைத் தேசிய வைத்தியசாலை - கொழும்பு
பணிப்பாளர் தேசிய வைத்தியசாலை-கண்டி
மத்திய அரசின் கீழ் நிர்வகிக்கப்படும் சகல வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள்,
மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்,
பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்.
உரிய திணைக்கள தலைவர்களும்,

## சுகாதார அமைச்சின் ஆரம்ப அரை தொழிநுட்பம் சேவை பிரிவு PL - 02 - 2006(ஏ) சம்பள அளவுத்திட்டத்திற்குரித்தான பதவிகளின் பொருட்டான முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை – 2024 (இரண்டாம் தடவை)

சுகாதார அமைச்சின் ஆரம்ப தொழிநுட்பம் சார்ந்த உத்தியோகத்தர் சேவை பிரிவின் PL - 02 - 2006 (ஏ) யிற்குரிய பதவிகளின் பொருட்டு தரம் III ற்கு ஆட்சேர்க்கப்பட்டு 03 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் சித்தி பெற வேண்டிய முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை 2024/09/01 சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடைபெறும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. பரீட்சை நடைபெறும் நிலையம் மற்றும் நேரம் என்பன பரீட்சை அனுமதி அட்டையில் குறித்து அனுப்பிவைக்கப்படும்.

02. **தகைமைகள் :-**

சுகாதார அமைச்சின் ஆரம்ப அரை தொழிநுட்பம் சார்ந்த உத்தியோகத்தர் பிரிவின் PL - 02 - 2006 (ஏ) யிற்குரிய சம்பள அளவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள (வர்ணம் பூசுபவர், போர்க்லிப்ட் இயக்குனர், மின்பிறப்பாக்கி இயக்குனர், பொயிலர் இயக்குனர், சப்பாத்து தயாரிப்பாளர், எலும்பு முறிவு தொழிநுட்ப உதவியாளர் (கால் தயாரிப்பாளர், சத்திரசிகிச்சை உபகரண தயாரிப்பாளர்) விலங்கு மேற்பார்வையாளர், இருட்டறை உதவியாளர், பூச்சியியல் பரிசாரகர் (வெளிக்கள), நீர்க்குழாய் தொழிநுட்பவியலாளர் / நீர்ப்பம்பி இயக்குனர், சுற்றுலா விடுதிக் காப்பாளர், சிகை அலங்காரம் செய்பவர், தச்சு வேலை செய்பவர், தோல் வேலை செய்பவர், காச்சியடித்து ஒட்டுபவர், ஒட்டுவேலை செய்பவர், உலோக வேலை செய்பவர், கோசெட்டியர், கடைச்சல் வேலை செய்பவர், மேசன், கொல்லன், சமையலாளர், தையல்உதவியாளர் (பெண்), ஓவியர், ஆய்வுகூட உதவியாளர், பரிசாரகர் (ஆண்/பெண்), தொலைபேசி இயக்குனர், வைத்தியசாலை ஓவசியர்) பதவிகளில் தரம் III ற்கு நியமிக்கப்பட்டுள்ள அல்லது உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்களும், இதுவரை இப் பரீட்சையில் சித்தியடையாத அலுவலர்கள் மாத்திரம் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

கவனிக்கவும் : **2024/08/07** திகதிக்கு தரம் **III** ற்கு நியமனம் பெற்று உரிய நியமனக் கடிதம் கிடைக்கப்பெற்ற உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் மாத்திரம் எமக்கு அனுப்பி வைக்கவும். சுகாதார செயலாளருடைய 2015.12.23ம் திகதிய **02 - 90/2015(I)** இலக்கமுடைய சுற்று நிருபம் தொடர்பாக.

சத்திரசிகிச்சை உபகரண தயாரிப்பாளர்
தோல் வேலை செய்பவர்
தையல்உதவியாளர் (பெண்)
சிகை அலங்காரம் செய்பவர்
வர்ணம் பூசுபவர்
கொல்லன்
ஒட்டுவேலை செய்பவர்,

2012.08.14ம் திகதியன்று உரிய பதவியில் ஆகக் குறைந்தது 03 வருடங்கள் திருப்தியான சேவைக் காலத்தை பூரணப்படுத்தியுள்ள உத்தியோகத்தர்கள் அந்தப் பதவிக்கு உரிய தரம் III இற்குரிய வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் (1வது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை) இருந்து விடுவிப்புச் செய்யப்பட வேண்டும்.

(2009.08.14ம் திகதிக்கு பின்னா உரிய பதவியில் நியமனம் வழங்கப்பட்டு தரம் III ற்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் இதன் பொருட்டு தகைமையினை பெறுவர்)

விலங்கு மேற்பார்வையாளர்
சப்பாத்து தயாரிப்பாளர்,
பூச்சியியல் பரிசாரகர் (வெளிக்கள)
உலோக வேலை செய்பவர்
தச்சு வேலை செய்பவர்
நீர்க்குழாய் தொழிநுட்பவியலாளர்
மேசன்
இருட்டறை உதவியாளர்
கோசெட்டியர்

2006.01.01 ம் திகதியின் பின்னர் உரிய பதவிக்கு நியமனம் பெற்று 2012.08.14ம் திகதி அப்பதவியில் குறைந்தது 03 வருடங்கள் திருப்தியான சேவைக் காலத்தை பூரணப்படுத்தியுள்ள தரம் III இற்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் அந்தப் பதவிக்கு உரிய தரம் III இற்குரிய வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் (1வது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை) இருந்து விடுவிப்புச் செய்யப்பட்டுள்ளனர்.

ஆய்வுகூட உதவியாளர்,
போர்க்லிப்ட் இயக்குனர்,
வைத்தியசாலை ஓவசியர்
பரிசாரகர் (ஆண்/பெண்),
தொலைபேசி இயக்குனர்,
சுற்றுலா விடுதிக் காப்பாளர்,
சமையலாளர்,
ஓவியர்,
கடைச்சல் வேலை செய்பவர்,

பழைய ஆட்சேர்ப்புத்திட்டத்திற்கு உரிய "தாபன விதிக்கோவை மற்றும் நிதிப்பிரமாணம்" வடயங்களில் சித்தியடைந்துள்ள உத்தியோகத்தர்கள் புதிய ஆட்சேர்ப்புத் திட்டத்தின்படி நடாத்தப்படும் தரம் III இற்குரிய வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் (1வது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில்) இருந்து விடுவிப்புச் செய்யப்பட வேண்டும்.

காச்சியடித்து ஒட்டுபவர்,

பழைய ஆட்சேர்ப்புத்திட்டத்திற்கு உரிய "தாபன விதிக்கோவை மற்றும் நிதிப்பிரமாணம்" வடயங்களில் சித்தியடைந்துள்ள உத்தியோகத்தர்கள் புதிய ஆட்சேர்ப்புத் திட்டத்தின்படி நடாத்தப்படும் தரம் III இற்குரிய வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் (1வது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில்) இருந்து விடுவிப்புச் செய்யப்பட வேண்டும்.

03. **விண்ணப்பங்கள் :-**

இச்சுற்றறிக்கையின் இறுதியிலுள்ள மாதிரிப்படிவத்திற்கமைய விண்ணப்பதாரியினால் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் நிறுவனத்தலைவரினூடாக பணிப்பாளர் (பரீட்சை), சுகாதார அமைச்சு **,** "சுவசிரிபாய", 385, வண.பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு - 10 எனும் முகவரியை **2024/08/07** ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயரை **"PL - 02 – 2006 (ஏ) சம்பள அளவுத்திட்டத்திற்குரித்தான பதவிகளின் பொருட்டான முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை – 2024 (இரண்டாம் தடவை)"** என குறிப்பிடுதல் வேண்டும். **இவ் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளார் என்பதை தனிநபர் கோவைகளை பேணும் உத்தியோகத்தரும், விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள அனைத் தகவல்களும்**

385, පූජ්‍ය බද්දේගම විමලවංශ හිමි මාවත, කොළඹ 10. 385, வணக்கத்துக்குரிய பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு 10.385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha, Colombo 10, Sri Lanka.

சரியானவை என்பதை நிறுவன தலைவரும் சான்றுப்படுத்துதல் கட்டாயமாகும். தங்களது விண்ணப்பப் பத்திரத்துடன் விண்ணப்பதாரியின் முகவரியிடப்பட்ட ரூபா.110 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட (9"× 4") அளவுடைய கடித உறை 1 இணையும் (இதில் விண்ணப்பதாரி தனது சொந்த முகவரியினையோ, அல்லது அலுவலக முகவரியினையோ குறிப்பிடலாம்) இணைத்து அனுப்பிவைக்க வேண்டும். **விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னராக கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் சரியாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள், உரியமாதிரிப் படிவத்திற்கு ஏற்ப அமையாத விண்ணப்பங்களும் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிப்படும்.**

**விண்ணப்பமானது A4 தாளின் இருபக்கங்களினையும் பயன்படுத்தி தயாரிக்கப்படவேண்டும். முதலாவது பக்கத்தில் 01 - 04 வரையான விபரங்களும், இரண்டாவது பக்கத்தில் 05 - 08 வரையான விபரங்களும் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்.**

## 04. பரீட்சைக் கட்டணம்

4.1 முதன் முறையாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கட்டணங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனைய விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு விடயத்திற்கும் ரூபா.25 வீதம் இரத்துச் செய்யப்படாத முத்திரையினை ஒட்டி அதன் மீது தமது கையொப்பத்தினை இட்டு இரத்துச் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

4.2 எக் காரணத்தினைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமானது வேறு பரீட்சைகளின் பொருட்டு மாற்றப்படுதலோ, அல்லது மீளப் பெறுதலோ மேற்கொள்ள இடமளிக்கப்படமாட்டாது.

## 05. பரீட்சையின் பொருட்டு உட்பத்திக் கொள்ளுதல்

5.1 ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் பொருட்டு விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்படும். அப் பரீட்சை அனுமதிப் பத்திரத்தினை உரிய முறையில் பூரணப்படுத்தி பரீட்சை குழுவின் தலைவரிடம் கையளிக்க வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லையாயின் பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

5.2 . பரீட்சையின் பொருட்டு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளின் பொருட்டு பரீட்சைக் குழுவின் தலைவருக்கு தங்களினது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுவதன் பொருட்டு கீழ் குறிப்பபிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றினை கொண்டு வருதல் வேண்டும்.

(அ) தேசிய அடையாள அட்டை
(ஆ) திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை
(இ) வலுவிலுள்ள சாரதி அனுமதிப்பத்திரம்
(ஈ) வலுவிலுள்ள கடவுச் சீட்டு

## 06. பரீட்சை நடைமுறை

| | |
|---|---|
| பரீட்சை முறைமை | : எழுத்துப் பரீட்சை (பல்தேர்வு வினாத்தாளை கொண்டது) |
| காலம் | : 02 மணித்தியாலங்கள் |
| முழுப் புள்ளிகள் | : 100 |
| சித்தியடைய வேண்டிய புள்ளி | : 40 |

07. பரீட்சை பாடத்திட்டம்

| வினாத்தாளின் பெயர் | விடயப்பரப்பு |
|---|---|
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் மற்றும் தாபன விதிக்கோவை. | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் தொடர்பாக கீழ்வரும் காரணிகள்.<br>❖ நியமனம் செய்தல், தகுதிகாண் காலம், பதிற்கடமைக் காலம் மற்றும் சேவையில் உறுதிப்படுத்தல், வினைத்திறமைகாண் தடை, தொழிற்சங்க நடவடிக்கை.<br>தாபன விதிக்கோவை தொடர்பாக கீழ்வரும் காரணிகள்.<br>❖ சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்தல், இடமாற்றம் செய்தல், விடுமுறை, புகையிரத ஆணைச்சீட்டு, பாதுகாப்பு உடையும், சீருடையும், நலன்புரி வசதிகள், தொழிற்சங்க அங்கத்தவர்களுக்குரிய வரப்பிரசாதங்கள்.<br>(பல்தேர்வு வினாத்தாளை கொண்டது) |

08 பரீட்சைதொடர்பானஒழுங்குவிதிகளைக் கடைப்பிடித்தல்.

பரீட்சார்த்திகள் குறிப்புக்களைதன்னிடத்தில் வைத்துபார்த்துஎழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினைபார்த்துஎழுதுதலும் தடைசெய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவிசெய்தலைதவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசிமற்றும் அதனுடன் தொடர்புடையதொடர்பாடல் ,இலத்திரணியல் உபகரணங்களைபயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளைமீறும் எந்தவொருபரீட்சார்த்திமீதும் நடவடிக்கைஎடுக்கப்படும்.

09. இச்சுற்றறிக்கையில் உள்ள விடயங்களை உமது பிரிவு / விஷேட இயக்கங்கள் / நிறுவனத்தில் உள்ள சகல சுகாதார அமைச்சின் கீழ் பணிபுரியும் ஆரம்ப அரை தொழிநுட்பம் சேவை பிரிவு (PL - 02 - 2006 (ஏ) சம்பள அளவுத்திட்டத்திற்குரித்தான பதவிகளின் பொருட்டான சகல அலுவலர்களுக்கும் அறியப்படுத்துவதற்கு ஒழுங்கினை மேற்கொள்ளவும். (இந்த விபரங்களை www.health.gov.lk எனும் இணைய முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளமுடியும்.)

**கவனிக்கவும் : சிங்களம், தமிழ், ஆங்கில மொழி மூல சுற்றுநிறுபங்களுக்கிடையே ஏதாவது வேறுபாடுகள் காணப்படுமாயின் சிங்கள மொழி மூல சுற்றுநிருபமே வலுவுடையதாகும்.**

Chamika H. Gamage
Deputy Director General (Administration) II
Ministry of Health
"Suwasiripaya"
Colombo 10.

சாமிக எச். கமகே
பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) II
செயலாளருக்காக

**EXG**

அலுவலக உபயோகத்தின் பொருட்டு

<u>மாதிரி விண்ணப்பப் படிவம்</u>

<u>சுகாதார அமைச்சின் ஆரம்ப அரை தொழிநுட்பம் சேவை பிரிவு PL - 02 – 2006 (ஏ) சம்பள அளவுத்திட்டத்திற்குரித்தான பதவிகளின் பொருட்டான முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை – 2024</u>

<u>(இரண்டாம் தடவை)</u>

**01** (அ) (i) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (சிங்களத்தில் / தமிழில் எழுதவும்) :..............................

..............................................................................................................................

(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் ( ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில் எழுதவும்) :

(iii) முதல் எழுத்துக்களுடன் பெயர் : (சிங்களத்தில்) / தமிழில்): ................................

(iv) முதல் எழுத்துக்களுடன் பெயர் : (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில்)

(ஆ) (i) பதவி : ..............................................................................................

(ii) தரம் III ற்கு நிரந்தர நியமனம் பெற்ற திகதியும்:............................................

(iii) தற்போது பெறும் வருடாந்த வேதனம் :........................................................

(iv) 2012.08.14 ம் திகதியன்று சேவைக்காலம் : ..................................................

(v) கையடக்கத் தொலைபேசி இல :

(vi) தேசிய அடையாள அட்டை இல:

(vii) மின்னஞ்சல் முகவரி : ..........................................................................

**02** (அ) தற்போது சேவை புரியும் நிறுவனம் :

(சிங்களத்தில்) ..........................................................................................

(தமிழில்) ..............................................................................................

(ஆ) மாகாண சபையாயின் உரிய மாகாணம் :...................................................

(இ) சேவை நிலையம் நிர்வகிக்கப்படுவது மத்திய அரசினால் ☐ மாகாண சபையினால் ☐

(ஈ) அதற்குரிய மாவட்டம் : ...........................................................................

(உ) பரீட்சை அனுமத அட்டை அனுப்புவதன் பொருட்டு தெளிவாக விண்ணப்ப தாரியினது முகவரியிடப்பட்ட 9''x4'' அளவு ரூபா.110.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட கடித உறைகள் ஒன்று இணைக்கப்பட்டு உள்ளதா? ....................................................

(ஊ) (i) தபால் முகவரி (சிங்களத்தில்) : .........................................................

(ii) தபால் முகவரி (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில்) : ....................................

..............................................................................................................................

**03** பரீட்சைக்கு தோற்றவுள்ள மொழி (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்): ..........................

**04** (அ) இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றியுள்ளீரா? ............................................

(ஆ) அவ்வாறு தோற்றியிருந்தால் இந்த தடவை முத்திரை ஒட்டப்பட்டுள்ளதா?

| முத்திரைக் கூண்டு |
|---|

**05 விண்ணப்பதாரியின் உறுதியுரை**

(i) இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என்றும் இப் பரீட்சைக்கு நான் முதற்தடவையாக தோற்றுவதனால் பரீட்சைக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்றும் / முதற் தடவை அல்லாத படியால் ரூபா................ பெறுமதியுடைய முத்திரை ஒட்டியுள்ளதாகவும் இம் முத்திரையானது விண்ணப்பப்படிவத்தில் ஒட்டி இரத்துச் செய்வதற்கு முன்னர் பாவிக்கப்படாத பெறுமதியுடைய முத்திரையெனவும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

(ii) சுகாதார அமைச்சினால் பரீட்சைகள் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சட்ட திட்டங்களுக்கு அமைய செயற்படுவேன் என்றும், இப் பரீட்சை தொடர்பான பிரமாணங்களுக்கு அமைய நான் தகைமையற்றவனாக காணப்பட்டால் எனது பரீட்சார்த்தித் தன்மையினை இரத்துச் செய்தவற்கும் இது தொடர்பாக எடுக்கப்படும் எந்த தீர்மானத்திற்கும் இணங்குவேன் என்றும் இத்தால் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

திகதி : ..........................

......................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

**06 தனிநபர் கோவையினை கையாளும் விடய முகாமைத்துவ உதவியாளரின் உறுதியுரை**

இவ் விண்ணப்பமானது விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர்/ பின்னர் என்னிடம் பாரமளிக்கப்பட்டது என்றும், சுயவிபரக் கோவையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும், தரம் III ற்கான வினைத்திறமை காண் தடைப்பரீட்சை இவ்விண்ணப்பப் பத்திரத்தின் பிரதி ஒன்று சுயவிபரக் கோவையில் கோவையிடப்பட்டுள்ளது என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : ..............................

......................................
பெயர், கையொப்பம்

**07 நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

திருவாளர்/திருமதி/செல்வி........................................................................................................என்பவர்.....................
.............................................................. ஆக இந்நிறுவனத்தில் சேவையாற்றுகின்றார் எனவும் இவ் உத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறைஎன்பதால் / முதன் முறையல்ல என்பதால் ரூபா ................. பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும் / முத்திரைகள் ஒட்ட அவசியமில்லை எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கபட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவையில் உள்ள விபரங்களின் படி சரியானவைகள் எனவும், இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான தகமைகளை இவர் கொண்டுள்ளர் எனவும், எனது முன்னிலையில் கையொப்பமிட்டுள்ளார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி .....................................

......................................
நிறுவனத் தலைவரின் கையொப்பம்

**08 பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு / விசேட பிரிவின் தலைவரின் உறுதிப்படுத்தல்**

திரு/திருமதி/செல்வி/செல்வன் ............................................. என்பவர் எனது பிரிவில் / விசேட பிரிவில் ....................................... உத்தியோகத்தராக பணியாற்றுகின்றார் என்னும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் சுயவிபரக் கோவைக்கு அமைய சரியானவையென்றும், இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரிய தகைமைகளினை இவர் பூத்தி செய்துள்ளார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: .............................

..........................................
பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு /
விசேட பிரிவு தலைவரின்
கையொப்பம்

(இறப்பர் முத்திரை இடப்பட வேண்டும்)